## சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.
## O.S.எண். 1253/2022

**வா.சா.2. மணிவண்ணன்** 17.08.2023.

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் ஆரம்பத்தில் பொருளூரில் குடியிருந்து வந்தேன் தற்போது 10 ஆண்டுகளாக அரசப்பபிள்ளைபட்டியில் வசித்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையை நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான் புரோநோட்டு வழக்கிற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதி, பிரதிவாதிக்கு உண்டான பணப்பரிவர்த்தனை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. பிரதிவாதி எதற்காக கடன் வாங்கினார் என்று வாதி சொன்னார். ஒரு 3 முதல் முன்றரை வருடத்திற்கு முன்பு ராஜன் பிரதிவாதி தோட்டம் வாங்குவதற்காக கடன் பெற்றார் என்ற விபரத்தை என்னிடம் சொன்னார். அந்த விபரத்தை நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் நான் சொல்லவில்லை. தாவா புரோநோட்டை நான் எழுதிய போது பிரதிவாதியின் கையெழுத்து அதில் இருந்தது. அது முதல் நாளில் வாங்கியதாக ராஜன் என்னிடம் சொன்னார். நான் அரசப்பபிள்ளைபட்டியில் 10 ஆண்டுகளாக வசித்து வருகிறேன் என்று சொல்லியுள்ளதை பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தாவா புரோநோட்டை நான் பூர்த்தி செய்வதற்கு முன்பு கையெழுத்து , கைரேகை இருந்தது நான் பூர்த்தி செய்தபின்பு சாட்சிகள் கையெழுத்து செய்தார்கள். தாவா புரோநோட்டில் என்ன விபரம் நான் எழுதினேன் என்று தற்போது எனக்கு ஞாபகமில்லை. தாவா புரோநோட்டை ராஜன் பிரதிவாதியின் கையெழுத்தை போலியாக உற்பத்தி செய்து போட்டு என்னிடம் கொடுத்து பூர்த்தி செய்ய கொடுத்ததில் நான் புரோநோட்டை பூர்த்தி செய்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. போலியாக உற்பத்தி செய்த புரோநோட்டிற்கு ஆதரவாக நான் பூர்த்தி செய்து அதற்கு பொய்யாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் தவறு.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2023.08.12 17:38:00 +0530

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்